DEPOSITION OF WITNESS 5
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 124/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : திரு.முத்துராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 04.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 4th June 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 14.02.2015ம் தேதி நிலையப்பொறுப்பில் இருந்த பெண் தலைமைக்காவலர் உமாமகேஸ்வரி என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலையக்குற்ற எண்.98/2015 ச/பி.294(பி), 324, 506(2) இதச வழக்கை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே காலை 9.00 மணிக்கு சம்பவ இடமான காந்திநகர் கீழ 4ம் தெருவிற்கு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் ஆறுமுகம், பெருமாள் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், மாதிரி வரைபடம். அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அதன்பிறகு

திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த கோமதியை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். அதன்பிறகு அரசுதரப்பு சாட்சிகளான பாப்பா, பெருமாள், உமாமகேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கின் எதிரி சின்னதுரையை தேடி வந்தநிலையில் அவர் திருநெல்வேலி அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. 20.06.2015 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் நான்சிடோரா மற்றும் மருத்துவர் அகிலாண்டபாரதி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மருத்துவர் அகிலாண்டபாரதியிடமிருந்து காயம்பட்ட நபருக்கான காயச்சான்றிதழை பெற்றேன். அந்த காயச்சான்றில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளிக்கப்பட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி), 324, 506(2) இதச விலிருந்து 294(பி), 326, 506(2) இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கையை நீதிமன்றத்திற்கு அன்றைய தினமே அனுப்பிவைத்தேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 20.06.2015 ம் தேதி இந்த வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக 294(பி), 326, 506(2) இதச ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.1 க்கு எந்த பக்கத்தில் காயம் ஏற்பட்டது என்றால் வலது பக்கத்தில் காயம் ஏற்பட்டது. எந்த ஆயுதத்தால் அ.சா.1 க்கு காயம் ஏற்படுத்தப்பட்டதாக எனது விசாரணையில் துலங்கும் என்றால் கத்தியால் காயம் ஏற்படுத்தப்பட்டதாக எனது விசாரணையில் துலங்கும். இவ்வழக்கில் எதிரியால் சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்டதாக கூறி ஆயுதம் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. ஆயுதம் கைப்பற்றப்பட்டிருந்தால் அது படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவம் தொடர்பாக வேறு பொருட்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு வழக்கு சொத்துக்களாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டனவா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் அ.சா.1 மற்றும் எதிரி கணவன், மனைவி என்றால் சரிதான்.

இவ்வழக்கில் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த நபர்களை சாட்சியாக குறிப்பிடாமல் அ.சா.1ன் குடும்பத்தில் உள்ள நபர்களை மட்டும் சாட்சியாக குறிப்பிட்டதற்கான காரணம் என்னவென்றால் மற்ற நபர்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் அடிபம்பு எதுவும் இருந்ததாக பார்வை மகஜரிலும், மாதிரி வரைபடத்திலும் துலங்குமா என்றால் துலங்காது. மாதிரி வரைபடத்தில் சம்பவமானது காந்திநகர் 4ம் தெரு ரோட்டில் வைத்து நடைபெற்றதாக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் சம்பவமானது அ.சா.1ன் வீட்டிற்கு முன்பு நடந்ததாக குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் கூறியவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு பட்டியல் சாட்சிகளை முறையா கவிசாரிக்கவில்லை என்றாலும், காயம்பட்ட நபருக்கான காயச்சான்றிதழை பெறவில்லை என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**